# தமிழ் இலக்கியங்களில்
## சமயமும் சமூகமும்

தொகுதி – II



பதிப்பாசிரியர்கள்

முனைவர் க. முருகேசன்

முனைவர் மா. சிதம்பரம்

முனைவர் சு. குமரன்

முனைவர் சு. இராமலிங்கம்

திரு. கி. பொன்னுதுரை

# தமிழ் இலக்கியங்களில் சமயமும் சமூகமும்

**(பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்)**


| | | |
|---|---|---|
| பதிப்பாசிரியர்கள் | : | **முனைவர் க. முருகேசன்**<br>**முனைவர் மா. சிதம்பரம்**<br>**முனைவர் சு. குமரன்**<br>**முனைவர் சு. இராமலிங்கம்**<br>**திரு. கி. பொன்னுதுரை** |
| பதிப்புரிமை | : | பதிப்பாசிரியர்கள் |
| முதற்பதிப்பு | : | நவம்பர், 2018 |
| வெளியீடு | : | **தமிழ்த்துறை**<br>**கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி**<br>கோயம்புத்தூர் - 641029. |
| கணினி | : | பிரடாக் பிரிண்ட், கோயம்புத்தூர் - 29. |
| அச்சாக்கம் | : | பிரடாக் பிரிண்ட்,<br>476, பூமாதேவி கோவில் அருகில்<br>கவுண்டர் மில்ஸ் (அஞ்சல்)<br>கோயம்புத்தூர் - 29.<br>அலைபேசி : 9843273994, 7358863327 |
| பக்கங்கள் | : | XXII + 488 = 510 |
| விலை | : | உரூ. 400/- |

**ISBN : 978 - 93 - 80800 - 90 - 5**


# International Conference on Depiction of Religion and Human Society in Tamil Literature


| | | |
|---|---|---|
| Editor's | : | **Dr. K. Murugesan. Dr. M. Chidambaram**<br>**Dr. S. Kumaran. Dr. S. Ramalingam**<br>**Mr. K. Ponnudhurai** |
| Copyright's | : | Editors |
| First Edition | : | November, 2018 |
| Published | : | **Department of Tamil**<br>**Kongunadu Arts and Science College**<br>Coimbatore - 641 029. |
| Computer | : | **Prdag Print**, Coimbatore - 29. |
| Printing at | : | **Prdag Print**<br>476, Near Boomadevi Kovil<br>G.N. Mills (Po), Coimbatore - 29.<br>Cell : 98432 73994, 91505 91017 |
| Pages | : | XXII + 488 = 510 |
| Prize | : | **Rs. 400/-** |

168. **திருமதி. மாலதி பழனியப்பன்** 879
நகர வயிரவன் கோயில் சிற்பங்களும் - ஓவியங்களும்

169. **முனைவர் இரா. மணிமேகலை** 883
சுந்தரரின் பாடல்களில் வாழ்வியல் அகச்சான்றுகள்

170. **முனைவர் மு. ருக்மணி** 889
காசிஆனந்தனின் நறுக்குகளில் சமூகஉணர்வுகள்

171. **முனைவர் ச. அரிச்சந்திரன்** 894
சோளகர் தொட்டி புதினம் காட்டும் பழங்குடிச் சமூகமும் சமயமும்

172. **திரு. மு. சதீஸ்குமார்** 900
உலக அமைதிக்கு மணிமேகலை காட்டிய வழி

173. **மருத்துவர் இரா. செல்வராஜ்** 905
தமிழ் இலக்கியத்தில் ஆநிரைகளும் இடையர் சமூகமும்

# 171. சோளகர் தொட்டி புதினம் காட்டும் பழங்குடிச் சமூகமும் சமயமும்

**முனைவர் ச. அரிச்சந்திரன்**
*உதவிப்பேராசிரியர்*
*தமிழ்த்துறை (சுயநிதிப்புலம்)*
*கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)*
*கோயம்புத்தூர் - 641 029.*

மனித சமூகத்தின் தோற்றம் பழங்குடிகளிடமிருந்துதான் தொடங்குகிறது. இது உலகில் வாழும் அனைத்து மாந்தர் இனத்திற்கும் பொருந்தும். குழுவாக வாழ்ந்து வந்த பழங்குடிகளிடமிருந்தே இன்றைய சமூகமும் சமயமும் தோற்றம் பெற்றன. அவர்களிடமிருந்து பிரிந்து முன்னேறிய சமூகம் நாகரீகச் சமூகமாக வளர்ச்சி பெற்றது. இருப்பினும் பழங்குடிகள் இன்னமும் தங்களது பழம் மரபினைப் பின்பற்றி வாழ்ந்து வருகின்றனர். தமிழகத்தில் மொத்தம் 36 வகையான பழங்குடி சமூகம் வாழ்ந்து வருகின்றன. அவற்றில் பல்வேறு சமூகம் அழிவின் விளிம்பில் உள்ளன என்பது மிகவும் வருத்தம் தரக்கூடியதாக உள்ளது. இன்றைய நவீன நாகரீகத்தின் தாக்கம் காடுகளிலும் மலைகளிலும் இயற்கை அன்னையின் மடியில் வாழ்ந்து வரும் இம்மக்களையும் விட்டு வைக்கவில்லை. நாகரீகம், இடப்பெயர்வு என்ற பெயரால் அவர்களது அடையாளங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன. கூடவே அரசின் பல்வேறு வகையான கட்டுப்பாடுகள் அவர்களது சுதந்திர வாழ்விற்குத் தடையாக உள்ளது. காட்டின் பாதுகாவலர்களாக விளங்கும் அவர்களைக் காட்டை விட்டு வெளியேற்றி அவர்களது பூர்வீக அடையாளங்களை முற்றிலும் அழிக்கும் முயற்சிகள் அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றது.

அவ்வகையில் தமிழகத்தின் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் வாழ்ந்து வரும் சோளகர் பழங்குடி மக்கள் எண்பதுகளின் இறுதியிலும் தொண்ணூறுகளின் தொடக்கத்திலும் எதிர்கொண்ட நிகழ்வுகளை மையப்படுத்திப் படைக்கப்பட்டதுதான் சோளகர் தொட்டி எனும் புதினம். இம்மக்களின் சொல்லெண்ணாத் துயரம் இப்புதினத்தைப் படிப்போரின் நெஞ்சத்தைச் சுடும் வலிமையுடையதாக உள்ளது. எவ்விதமான பகட்டு வாழ்விற்கும் ஆசைப்படமால் இயற்கையின் கொடையினை நம்பி வாழ்ந்து வரும் இம்மக்கள் பிறரின் இடையீடுகளால் எவ்வண்ணம் பாதிக்கப்படுகின்றனர் என்பதையும் இம்மக்களின் சமூகம் எங்ஙனம் அடையாளப்படுத்தப்படுகிறது என்பதை எடுத்துரைக்கும் நோக்கில் இக்கட்டுரை அமைகிறது.